// அவசரம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3557/ஆ4/2024 நாள்: 27.12.2024

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மார்ச்/ ஏப்ரல் – 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு– பெயர்ப்பட்டியல் சேர்த்தல் / நீக்கம் செய்தல் – தொடர்பாக

பார்வை : 1. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.015885/ பி1/2024 நாள் 11.11.2024 , 23.12.2024

2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 12.11.2024, 23.12.2024

3. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.015885/ பி1/2024 நாள் 27.12.2024

===============

பார்வை 1 –ல்காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதங்களில், 2024–2025–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் GR (generared register no) எண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியல் 13.11.2024 பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்யுமாறும், அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் அத்திருத்தங்களை மேற்கொண்டு 15.11.2024 முதல் 22.11.2024 வரையிலான நாட்களில் பதிவேற்றம் செய்யுமாறும் பார்வை 2–ல் காணும் இவ்வலுவலகம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ,மார்ச்/ஏப்ரல்–2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணக்கரின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலில் விடுபட்டுள்ள மாணவர்களைச் சேர்த்திடவும் (Addition). இறப்பு (Death) / மாற்றுச் சான்றிதழ் பெற்ற மாணவர்களை நீக்கம் (Deletion) செய்திடவும் பள்ளித் தலைமையாசிரியர்கள் முகப்புக் கடிதத்துடன், மாற்றுச் சான்றிதழ் வழங்கப்பட்ட மாணவருடைய நகல் மற்றும் பெயர் பட்டியல் (NOMINAL ROLL) பக்க நகல் இரு பிரதிகளில் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலை) 30.12.2024 –க்குள் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, பெயர்பட்டியலில் நீக்கம் கோரி கடிதங்கள் அனுப்பி இருப்பினும் தற்போது, மீண்டும் தேர்வெண்ணுடன் அம்மாணவர்களின் விவரங்களையும் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலை) தவறாமல் ஒப்படைத்திட மீள அறிவுறுத்தப்படுகிறது.

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக்கல்விஅலுவலர்
வேலூர்.

பெறுநர்,

அனைத்து வகை உயர் /மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள் ) வேலூர், அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.